திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, முதல்வர், அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: மரு.மு.ரவிச்சந்திரன், எம்டி.,

மூ.மு.எண். 586/நி5/2017 நாள்: 07 .12.2020.

பொருள்: நிர்வாகம்- திரு.த.சென்னகேசவன், இளநிலை உதவியாளர், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி பணிமாறுதல் மூலம் பணியில் சேர்ந்த இளநிலை உதவியாளர் தற்காலிக பணியை பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - குறித்து.

பார்வை:
1) அரசாணை எண் 191 பொதுத்துறை நாள்: 01.02.1962.
2) சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.79682/நி2/2/2017 நாள் : 20.06.2019.
3) சென்னை, மருத்துவ கல்வி இயக்குநர் அவர்களின் பணி ஆணை ந.க.எண்: 51653/நி2/5/2019-4 நாள்: 03.07.2019.

*****

**ஆணை:**

பார்வை (2) மற்றும் (3)-ல் காணும் கடிதத்தின்படி, பணிமாறுதலில் இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு பெற்று திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்து வரும் கீழ்கண்ட இளநிலை உதவியாளரின் தற்காலிக பணியை அன்னார் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாள் 05.07.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணை வழங்கப்படுகிறது. அன்னார் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாள் முதல் தொடர்ச்சியாக மூன்றாண்டுகள் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் பணி அமர்த்தப்படுகிறார்.

அன்னார் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாள் முதல் தொடர்ச்சியாக மூன்றாண்டுகள் பணிக்காலத்தில் இரண்டாண்டுக்குள் தகுதிகாண் பருவத்தில் தமிழ்நாடு மருத்துவ விதி தொகுப்பு தேர்வு மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி தேர்ச்சி பெற வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.த.சென்னகேசவன், இளநிலை உதவியாளர் | 05.07.2019 முற்பகல் | 05.07.2019 முற்பகல் |

மேற்கண்ட பணிவரன்முறை பதிவு அன்னாரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முதல்வர்
07/12/20

பெறுநர்,
திரு.த.சென்னகேசவன்,
இளநிலை உதவியாளர்,
திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி-11.
நகல்: கணக்கு 3 பிரிவு உதவியாளர் —— அலுவலக கண்காணிப்பாளர் மூலமாக
நகல்: பணிப்பதிவேடு